# உருகாத வெண்ணெய்

சுடர்விட்டு எரிந்தது பஞ்சுத்திரி விளக்கு. ஊதுவத்தியின் மணம் எங்கும் பரவியது. கோலமிட்டிருந்த கருங்கல் சதுக்கத்திலே பழம்பாக்கு வெற்றிலை நிறைந்த தாம்பாளம் இருந்தது. அந்தக் காட்சியின் மங்கல அழகைப் பரவசத்துடன் பார்த்தபடியே, ஜனகம் 'மடிசார்' புடைவை சலசலக்க, கையில் நிவேதனத்தை ஏந்தி வந்தாள். முறைப்படி நுனி வாழை இலையிலே அதை வைத்து, அட்சதை மஞ்சளும் உத்தரணி நீரும் புரோட்சித்து முடித்தாள். "உருகாத வெண்ணெயும் ஓரடையும் வைத்து உன் நோன்பு நோற்றேன். ஒரு நாளும் என் கணவன் பிரியாதிருக்க வேணும்!" என்று நாக்கு முணுமுணுக்க, உள்ளம் உருக வேண்டிக் கொண்டு குத்துவிளக்கின் முன் வணங்கி எழுந்தாள்.

மஞ்சள் சரடு கட்டிக்கொண்டு நமஸ்காரம் செய்ய, கணவனை நாடிப் போனாள். கிருஷ்ணன் என்ன செய்துகொண்டிருந்தான்? சுகமாகத் தூங்கிக்கொண்டிருந்தான்.

சற்று நேரம் அவன் பக்கத்தில் நின்று அவனையே கூர்ந்து பார்த்தாள் ஜனகம். அவன் முகத்திலோ உடலிலோ சலனமே இல்லை; அத்தனை ஆழ்ந்த துயிலில் இருந்தான். எழுப்ப மனம் வரவில்லை அவளுக்கு. என்னவோ நினைத்துக்கொண்டாள். சிரிப்பு வந்தது. எழுப்ப வேண்டியது அவசியம் என்ற உறுதி வந்தது. "ஏன்னா!" என்று அழைத்து லேசாகத் தொட்டாள்.

கிருஷ்ணன் விழித்தான். பிறகு உறுத்துப் பார்த்தான். பார்வையிலே தணிவு இல்லை.

"நமஸ்காரம் பண்ணுகிறேன்" என்றாள். அவன் கட்டிலில் உட்கார்ந்தான்.

"எழுந்திருக்கவேண்டுமா?" என்று கேட்டான்.

"உட்கார்ந்து கொண்டால் போதும்" என்று சொல்லிவிட்டு அவள் நமஸ்கரித்தாள்.

பிறகு, "காலையில் காரடை சாப்பிடலாம். இப்போது சுகமாகத் தூங்குங்கள். இன்னும் விடியவில்லை" என்று சொல்லி நகர்ந்தாள்.

கிருஷ்ணன் மறுபடியும் படுத்துக்கொண்டான். அறையில் ரேடியம் கடிகாரம் மணி இரண்டரை காட்டிற்று. இந்த நள்ளிரவில் எழுந்து நோன்பு நோற்கும் மனைவியின் சிரத்தையை வியந்தபடியே அவன் விழித்திருந்தான்.

ஜனகம் உள்ளே போய்ப் பூஜை அறையிலும் சமையலறையிலும் ஒழுங்கு செய்துவிட்டு, கொளுத்திய ஊதுவத்தியுடன் திரும்பி வந்தாள். கிருஷ்ணன் முழங்கையைக் கண்களின்மேல் வைத்துப் படுத்திருந்ததால் அவன் விழித்திருந்ததோ, கண் அயர்ந்ததோ தெரியவில்லை அவளுக்கு. ஊதுவத்தியை உரிய இடத்தில் செருகிவிட்டு, அறையின் மறுபுறம் இருந்த தன் கட்டிலில் படுத்தாள். அப்போது அவளிடம் மனநிறைவு பரிபூரணமாக உண்டாயிற்று. ஒரு மணிக்கு எழவேண்டும் என்ற சங்கற்பத்துடன் படுத்து, அப்படியே எழுந்து வெந்நீர் போட்டு நீராடி நோன்பு நோற்றுக் கணவனுக்கும் நமஸ்காரம் பண்ணியாகிவிட்டது. மனநிறைவு இராதா? சென்ற ஆண்டு எல்லாந்தான் செய்தாள்; ஆனால் கணவன் வெளியூர் போயிருந்தான். அவனுக்கு நமஸ்காரம் செய்ய முடியாத குறை இருந்ததே!

"இந்தத் தடவை வெண்ணெய்கூட எடுத்துவிட்டேன்!" என்று பெருமிதம் உண்டாயிற்று. அப்போது அவள் அறியாமலே கைகள் குவிந்தன.

அந்த அஞ்சலியை உந்திய உருவம் எது? யார் அவன் மனக்கண்களில் தோன்றினார்? கணவனா? கடவுளா? சாவித்திரியா? அல்லது பர்வதப் பாட்டியா?

** ** **

மூன்றாண்டுகளுக்கு முன்பு ஜனகம் காரடை நோன்பு வரவேற்ற பாணியே முற்றும் மாறுபட்டிருந்தது.

பர்வதப்பாட்டி வந்தாள்; "நாளைக்கு நோன்பு" என்று திண்ணையில் சாய்ந்தபடியே சொன்னாள்.

ஜனகம் 'உம்' என்றாள்; பேசவில்லை. அதில் அவ்வளவு சிரத்தை அவளுக்கு இல்லை.

"காலையில் ஏழு மணிக்குள்ளே சரடு கட்டிக் கொள்ள வேணும்" என்று பாட்டி தொடர்ந்தாள்.

பேசவே இல்லை ஜனகம்.

"அவனுக்கு நாளைக்குக் காலையில் எத்தனை மணிக்குப் போகவேணும்? இல்லை, மத்தியான்ன 'டூட்டி'யோ?" என்று பாட்டி கேள்வி கேட்டபோது மறுமொழி கொடுக்க வேண்டிய அவசியம் நேர்ந்தது-

"காலையில்தான்; ஏழு மணிக்குப் போக வேண்டும்."

"ஆறரை மணிக்கு நோன்பை முடித்துச் சரடு கட்டிக் கொண்டுவிடு. மாசி இருக்கும் போது கட்டிக்கொள்வது விசேஷம்; பாசி படரும். மாசியும் பங்குனியும் கூடுகிறது எப்போது என்று நிச்சயமாகத் தெரியாதபோது, முன்னதாகக் கட்டிக்கொள்வதே நல்லது. என் தம்பி பஞ்சாங்கம் பார்த்து ஏழேகால் மணிக்கு என்று எழுதியிருக்கிறான். எங்கள் அடுத்த வீட்டு மீனாவின் மாமனார் 'சரியாக ஏழுக்கு' என்று எழுதியிருக்கிறாராம். உன் அம்மா அப்பாவாவது மாமனார் மாமியாராவது சரடு அனுப்பி, இத்தனை மணிக்குச் செய் என்று எழுதியிருக்கிறார்களா?" என்று பாட்டி மீண்டும் கேட்டாள்.

"யாரும் எழுதவில்லை" என்று சுருக்கமாகச் சொன்னாள் ஜனகம். அவளுக்குப் பாட்டி மேல் கோபமாக வந்தது. ஒவ்வொரு பண்டிகைக்கும், "இதைச் செய்ய வேணும், இப்படிச் செய்ய வேணும்" என்று சொல்லிச் செல்வாள் பாட்டி.. மறுநாள் வந்து, "செய்தாயா?" என்று கேட்பது வழக்கம். புதுக் குடித்தனக்காரியான ஜனகம், "இல்லை" என்று சில சமயம் உண்மையைச் சொல்லுவாள். அப்போது பாட்டி, "இது உடன்பிறந்தவர்க்கும் சிரேயஸ்!", "இது நாம் போகிற வழிக்கு ஒரு துணை!" என்று புத்தி புகட்டிப்போவது தவறாது. அப்போது ஜனகம் கலங்குவாள்; ரோசம் உண்டாகும். ஆனால் புத்திமதி உறைக்காது.

இப்போதும் பாட்டியின்மேல் கோபந்தான் வந்தது. பெற்றோர், புக்கத்தார், 'எல்லாம் அவள் இஷ்டம்' என்று விட்டுவிட்டு, நோன்பைப்பற்றி எழுதாமல் இருக்கும்போது பாட்டி வந்து பாடம் படிக்கிறாளே, இத்தனைக்கும் அந்தக் காரடை கணவனுக்குப் பிடிக்குமா? அவனுக்குத் தித்திப்பே பிடிக்காது! "இது ஒரு பட்சணமாக்கும்!" என்று வேறே அவன் நகைத்ததுண்டு. இதற்கு முன்பு இரண்டு ஆண்டுகள், புக்ககத்தில் நோன்பு செய்தாள். பலபேரோடு செய்தாள்.

அமர்க்களமாக இருந்தது. அப்போது ஒரே ஒரு சிறு வில்லையைப் பிரசாதமாக மட்டும் சாப்பிட்டான் அவள் கணவன். பாட்டியிடம் இதையெல்லாம் எடுத்துச் சொல்ல விரும்பவில்லை. சுருக்கமாகப் பேசினாள்.

பாட்டி விடவில்லை; "ஏடு எடுத்து வைத்திருக்கிறேன், இரண்டு நாளாக. சாயங்காலம் கடைந்து வெண்ணெய் எடுப்பேன்; கொஞ்சம் காராமணியும் வெண்ணெயும் அனுப்புகிறேன்!" என்று சொன்னாள்.

"எதற்குப் பாட்டி? ஒருத்தரிடம் வாங்கி நிவேதனம் பண்ணுகிறதா?" என்று ஜனகம் சிரித்தாள்.

"வேண்டாம்; நீயே எடேன் வெண்ணெயை; நான் தரவில்லை!"

"ஆமாம், கடைய லாயக்கான தயிர்தான்! இரண்டு பேருக்கு எத்தனை தயிர் தோய்க்கிறேன்! கடைய முடியுமா? நிறைய இருந்தால் மங்கு மங்கு என்று இழுத்துக் கடைய ஆசையாய் இருக்கும்."

"எங்கள் குடும்பம் பெரிசுதான். ஆனால் பிரமாதப் பால் வாங்குகிறோமா, என்ன? தயிர் தோய்க்கிறேனோ? சின்னப் பாத்திரத்தில் தோய்த்து, பெரிய பாத்திரத்தில் கொட்டி ஜலம் விட்டடித்துத் தினமும் கடைகிறேன். நெய்க்கு ஆகிறது. நீ ஒரே ஒரு நாளைக்குச் செய்யேன்" என்று பாட்டி சளைக்காமல் சொன்னாள்.

"மோர் ஏன் இத்தனை நீர் என்று கேட்பாரே; வசவு வாங்கிக் கட்டிக்கொள்ளட்டுமா?" என்று ஜனகம் வாது செய்தாள்.

"கொஞ்சம் தயிரை எடுத்து வை; அதை மோர் இரண்டு கரண்டி விட்டுச் சிலுப்பி ஊற்றேன், ஒரு நாளைக்கு. என்ன சொல்லிவிடுவான், பார்க்கிறேன்!"

"நான் நீர் மோரைச் சாப்பிட வேண்டுமே!" என்று ஜனகம் சிரித்தாள்.

"நோன்பு நோற்கவேணும் என்று முனைந்தால் மோராவது நீராவதடி? மனம் இருந்தால் வழியுண்டு. 'உருகாத வெண்ணெயும் ஓரடையும் வைத்து உன் நோன்பு நோற்றேன்; ஒருநாளும் என் கணவன் பிரியாதிருக்க வேணும்' என்று சாவித்திரி புருஷன் உயிரைக் காப்பாற்ற நோன்பு பண்ணினாள். தினமும் . . . "

சாவித்திரி புராணத்தை ரசிக்காத ஜனகம், "தெரியும் பாட்டி; உருகாத வெண்ணெய் ஏன்? நெய்யை வைத்தால் என்ன?" என்று மீண்டும் சிரித்தாள் குறும்பாக.

"நீ என்ன வேணுமானாலும் செய்" என்று எழுந்துவிட்டாள் பாட்டி. "நான் காராமணி வைத்திருக்கிறேன். இங்கே கிடைக்கிறதில்லையே என்று ஊரிலிருந்து டப்பா நிறையக் கொணர்ந்தேன். கால்படி அரிசிக்கு ஒரு பிடி காராமணி போதும். காராமணியை வறுத்து ஜலத்தை விடு. வெந்ததும் வெல்லம் இத்தனை போடு. கரையட்டும். நன்றாகத் தளைக்கும்போது ஏலப்பொடி தூவி மாவைக் கொட்டிக் கிளறி இறக்கி வை. ஒரு தாம்பாளத்தில் கொட்டிப் பரத்திவிட்டால் சட்டென்று ஆறும். வடை மாதிரி வில்லை வில்லையாய்த் தட்டி, ஆவியிலே வேகவைத்து எடு; ஆச்சு, அப்புறம் நிவேதனந்தான். வெண்ணெயோடு சாப்பிட்டால்தான் ருசி கொடுக்கும். துளி வெண்ணெய் அனுப்புகிறேன். நீ கடைந்து எடுக்கிறதானாலும் இருக்கட்டுமே!" என்று சொல்லிவிட்டுத் திருப்தியுடன் போனாள் பாட்டி.

நோன்பு நோற்பதும் நோற்காததும் அவளுடைய சொந்த விஷயமாக இருக்க, பாட்டி ஏன் இப்படி உத்தரவு போடுகிறாள்? பாரத நாட்டுப் பழைய பெண்மணிகளின் பெருமை மறைந்து போகாமலிருக்கவும், பாரதநாட்டுத் தற்காலப் பெண்களின் பெருமை வளர்ச்சி குன்றி அழியாமலிருக்கவும் பாட்டி ஒரு சிறு கருவியாக இருக்கிறாள். இதை அறியவில்லை ஜனகம்.

"பாட்டி காரடைப் பக்குவம் சொன்னதை வேறு ஏதாவது பெயர் கொடுத்துப் பத்திரிகைக்கு எழுதலாம். அப்படி விவரமாகச் சொன்னாளே" என்று மட்டும் பாராட்டினாள்.

"பாட்டி புருஷனை இளமையிலேயே இழந்தவள். அவளுக்கு மற்றவர்களின் மங்கள வாழ்க்கையில் எத்தனை அக்கறை!" என்ற பாராட்டு ஏனோ தோன்றவில்லை.

சிறிது நேரம் யோசித்தாள். 'அடடா, அவருக்குப் பிடிக்காத காரடையைச் செய்வதில் என்ன பதிபக்தி சொட்டப் போகிறது? அந்தக் காரடை செய்கிற பரபரப்பிலே காபியைச் சரியாகக் கலக்காமல் அவருக்கு அதிருப்தி உண்டாகும்படி செய்ய நேர்ந்தாலும் நேரும். விளக்கை ஏற்றித் தேங்காயை உடைத்து நமஸ்காரம் பண்ணினால் போதும்' என்று முடிவு கட்டினாள் ஜனகம்.

காலையில் எழுந்து மடியாக வெந்நீர் போட வேண்டுமா? அட கஷ்டமே! வேலைக்காரி மெல்லத்தான் வருவாள். அவளுக்குத்தான் கல் கரியடுப்புப் பற்றவைத்துப் பழக்கம்.

'பச்சை ஜலம் விட்டுக் குளிக்கிறேன். தலைக்கு ஸ்நானம் வேண்டாம். எது சாக்கு என்று தொண்டைக் கோளாறு வந்தால், சங்கத்தில் போடும் நாடகத்தில் பாட்டுப் பாட முடியாதே!' என்று அப்புறம் யோசனையும் தீர்மானமும் வலுத்தன. அதனால் நோன்பு எண்ணம் உள்ளத்திலே தளர்ந்தது; நோன்பின் சிந்தனை மனத்தில் ஒட்டவில்லை.

அன்று மாலை கிருஷ்ணன் வீடு திரும்ப நேரமாயிற்று. 'ஏன்? ஏதாவது அபாயமோ? நோன்பை அலட்சியம் செய்யும் எனக்கு இது ஒரு சிட்சையோ?' என்று ஜனகம் சிந்திக்கத் தொடங்கிவிட்டாளா? இல்லை, இல்லை.எங்கேயாவது, யார் வீட்டிற்காவது போயிருப்பார். காபி பலகாரம் கிடைத்திருக்கும். தம் வயிறு நிரம்பிவிட்டதும் வீட்டிற்கு வர அவசரம் தோன்றாது. நான் தான் அவர் வரட்டுமென்று ஒன்றும் சாப்பிடாமல் பசியால் தவிக்கிறேன்' என்று அவள் மனசு குமுறியது.

கிருஷ்ணன் வந்ததுமே, "என்ன, இவ்வளவு நாழிகை? எனக்குப் பசி காதை அடைக்கிறது" என்று முகம் சிணுங்கினாள்.

"நீ சாப்பிடக் கூடாதோ?" என்றான் கணவன்.

"இனிமேல் அப்படியே செய்கிறேன்."

"இதோ பார். நாளைக்கு உனக்கு இது அவசியமாக இருக்கும் அல்லவா?"

ஜனகம் திரும்பிப் பார்த்தாள். கிருஷ்ணன் கையில் ஒரு டப்பா! கடைச் சரக்கு.

"எதற்கு?"

நாளைக்கு நோன்பில்லை? ராமு ஒரு டப்பா வாங்கினான், பெண்டாட்டி கேட்டாள் என்று. டால்டா என்று நினைத்தாயா? அந்த டப்பாவில் வெண்ணெயை விற்கிறார்கள். டப்பா வெண்ணெய் வைத்துச் சுவாமி நிவேதனமா என்று நானும் உன் மாதிரிதான் ஆச்சரியமாய்க் கேட்டேன். அதற்கு அவன், 'வெண்ணெய் என்ற திருநாமத்துடன் ஏதாவது வேணும் என்று பிடிவாதம் பிடிக்கிறாளே' என்று சொன்னான்." இவ்வாறு சொல்லிக் கிருஷ்ணன் சிரித்தான்.

ஜனகம் சிரிக்காமலேயே இடக்குடன், "நானும் ஒரு பிடிவாதக்காரி என்று வாங்கிக்கொண்டு வந்தீர்களாக்கும்!" என்றாள்.

"தெரியாவிட்டால் தோஷம் இல்லை; வாங்கிக்கொண்டு வரமாட்டேன், ஒருத்தி அத்தனை முக்கியமாய் வெண்ணெய் கேட்கிறாள், அவள் புருஷன் வாங்கிக்கொண்டு போகிறான் என்று தெரிந்த பிறகு எனக்கும் வாங்காமல் வர இஷ்டம் இல்லை. நீ மட்டும் வெண்ணெய் இல்லாமல் செய்கிறோமே என்று குறைப்பட்டுச் செய்வானேன்? இந்த நோன்பில் சுவாமி என்று பிரமாதமாக ஒன்றும் இல்லையே! அதனால் டப்பா வெண்ணெய்க்குத் தோஷம் இல்லை. மனசுக்குத் திருப்தியாய், குறைப்படாமல் செய்தால் போதுமே!" என்று சொல்லி நிறுத்தினான் கிருஷ்ணன்.

"தேவலையே கரிசனம்!" என்று சொன்னவாறு ஜனகம் வாசற்புறம் கதவு ஓசைப்படுவதைக் கவனித்தாள்.

"மாமி, பாட்டி தந்தாள்" என்று சிறுவன் ஒருவன் கையில் சிறு கிண்ணத்துடன் வந்தான். அதிலே ஒரு வெற்றிலையில் வெண்ணெய், ஒரு பிடி காராமணி, ஒரு சரடு, மூன்றும், பாட்டியின் ஆசியுடன் வந்தன.

கிருஷ்ணன் வியப்புடன், "ஏற்பாடு செய்தாயிற்றா? சரி, இருக்கட்டும், டப்பா வெண்ணெய் எப்படியும் அடைக்கும் ரொட்டிக்கும் போட்டுத்தானே தீர்க்க வேண்டும்?" என்றான்.

"பாட்டி தானே அனுப்புவதாகச் சொன்னாள்" என்று மட்டும் சொன்னாள் ஜனகம். "நான் காரடை செய்கிற உத்தேசம் இல்லை" என்று சொல்ல வாய் எழவில்லை. சிறுவன் கொணர்ந்து தந்த பண்டங்களை வாங்கி வைத்துக்கொண்டாள்.

'கைம்மை எய்துவதைக் குறைப்படுவது என்று சொல்வார்கள். குறைப்படாமல் இருக்கத்தான் இந்த நோன்பு. அதனால்தான் இந்தப் பெண்களுக்கு ஓர் அம்சங்கூடக் குறைக்காமல், விடாமல் செய்யத் தோன்றுகிறது போலும்!' என்ற சிந்தனையோடு கிருஷ்ணன் படுத்தான். அவளையும் கேலி செய்யலாமா என்ற ஆசை ஒரு பக்கம். அப்போது ஜனகம் தன்னுடைய மெத்தையை விரித்தபடியே, "நான் தேங்காய் மட்டும் உடைத்து நோன்பு செய்யப்போகிறேன்" என்று சொன்னாள். உடனே ஒரு துள்ளுத் துள்ளினாள்; "தேங்காயே இல்லையே வீட்டில்! கடை மூடி இருக்குமோ?" என்று கேட்டாள்.

அப்போது கடைக்குப் போகச் சோம்பல்தான் வந்ததோ, அல்லது நோன்பிலே அவளுக்குப் பற்று இல்லையே என்ற நினைப்போ, கிருஷ்ணன் உடனே பதிலளித்தான்; "விளக்கேற்றி ஒரு கும்பிடு போடு, போதும்" என்றான்.

"ஆமாம், அதுவும் செய்யலாம். இரண்டு நாளாய் வீட்டில் தேங்காய்த் துவையல், தேங்காய் தூவின கறி என்று தேங்காய் மயமாய் இருக்கிறது. போதாக்குறைக்கு, தேங்காய்ப் பர்பி வேறே வந்தது, எதிர் வீட்டிலிருந்து. தேங்காயைப் பார்த்தாலே வயிற்றைப் புரட்டுகிறது. நாளைக்கு

உடைக்கிற தேங்காய் செலவாக இரண்டு நாளாகும்" என்று ஆமோதித்தாள் ஜனகம். தேங்காய் வாங்கிவர வற்புறுத்தவில்லை.

மறுநாள் காலை எழுந்தாள்; காரடை நோன்புதான் நினைவில் வந்தது. 'தேங்காய் கூட உடைப்பதற்கு இல்லை; பச்சைத் தண்ணீரில் குளிப்பது அவசியந்தானா? தினமும் போலச் சுவாமிக்கு விளக்கேற்றி நமஸ்காரம் பண்ணிச் சரடு கட்டிக்கொண்டால் என்ன?" இப்படித் தோன்றிற்றுஒரு கணம்.

ஆனால் என்னவோ தடுத்தது அவளை. ஒரே ஒரு சிறு மந்திரம்; எளிமையான தீந்தமிழ் மந்திரம்; நோன்பின் சிறப்புக்கே மூலமான உயர் திருமந்திரம்; அதை உச்சரிக்க உள்ளம் ஆசைப்பட்டது. "உருகாத வெண்ணெயும் ஓரடையும் வைத்து உன் நோன்பு நோற்றேன். ஒரு நாளும் என் கணவன் பிரியாதிருக்கவேணும்." இதுதான் அந்த மந்திரம். அர்த்தம் அறிந்து, உணர்ச்சி நிறைந்து, உள்ளங் கனிந்து சொல்ல வேண்டிய மந்திரம் அது.

'காரடை எங்கே? உருகாத வெண்ணெய் எங்கே? நோன்பு நோற்கும் மனம் எங்கே?' என்று ஒரு தடுமாற்றம் ஏற்பட்டது.

'ஒரு நாளும் என் கணவர் என்னைப் பிரியாதிருக்க வேண்டும். இதுதான் என் ஆசை. இதுவேதான் பிரார்த்தனை. உள்ளமார, சர்வதா நான் இப்படித்தான் கடவுளை வேண்டுகிறேன். சதா என் நெஞ்சில் குமிழியிடும் விருப்பமும் வேண்டுகோளும் இதுதான். தனியாகச் சொன்னால்தானா? காரடை வைத்துக் கும்பிட்டால்தானா?'

இப்படியெல்லாம் கேள்விகளைக் கேட்டுத் தடுமாற்றத்தை ஒழித்து உறுதி பெற முயன்றாள். ஆனால் அறிவுக்கும் புலனுக்கும் எட்டாத ஏதோ ஒரு சக்தி, அவளுடைய போலித்தனத்தைப் பிடித்து உலுக்கிக்கொண்டிருந்தது.

'ஒரு நாளைக்கு, ஒரு சிறுபொழுதுக்கு, உன் சின்னத்தனத்தையும் சுயநலத்தையும் ஒழிக்க நீ முற்படவில்லையே! உன் கணவன் உன்னைப் பிரியாதிருக்க வேண்டும் என்று பேராசைப்படலாமா? சாவித்திரி காலனை வெல்ல முடியும் என்று அறிந்து நோன்பு நோற்கவில்லை; வெல்ல வேண்டும் என்ற வீம்புடன் நோன்பு செய்து வெற்றி பெற்றாள். ஆண்டில் ஒரு முறை நீயும் அவள் காட்டின வழியைக் கடைப்பிடித்தால் உன் மாங்கல்யம் ஒளிரும், உன் பெண்மை உயரும் என்று புராணமும் பெரியவர்களும் கூறுவதை ஏற்க உனக்கு மனம் இல்லை! உன் அகத்தில், உன் அகத்தை நிறைத்திருக்கும் உன் கணவருக்காக நீ இந்தச் சிறுபணி செய்ய ஆசைப்படவில்லை. அலட்சியம் செய்கிறாய். வேறு என்ன தான் நீ சாதிக்கப் போகிறாய்? வேறு எதில்தான் உன் பற்று நிலைக்கும்? எப்போதுதான் உன் சுயநலம் ஒழியும்? உன் மணவாழ்வு தளர்ச்சி அடையாது என்று நீ இப்போதும் நம்புகிறாயா? உனக்கு உரிமையான மனைவி ஸ்தானத்திலே சிறப்புற நட. நடிக்காதே!' என்று கோஷமிட்டுக் கொம்மாளம் போட்டு அவளைச் சிறுமையடையச் செய்துவிட்டது அந்தராத்மா.

பாட்டி மனக்கண்முன் தோன்றினாள். 'என் கைம்மைக்குக் காரணமே இத்தகைய அலட்சியந்தான். அதற்கு ஈடாக இப்போது பிறருக்குப் புத்தி சொல்கிறேன். பாட்டி நோன்பு நோற்றுக் கைம்மையை வென்றாளோ என்று சிரிக்காதே' என்று பாட்டி கேட்பது போல ஒரு பிரமை உண்டாயிற்று. ஜனகம் விரைந்தாள்.

கிணற்றடியிலே போய் நீரை மொண்டு தலையிலே விட்டுக்கொண்டு ஸ்நானம் செய்தாள். அரிசியை எடுத்தாள். மற்ற வேலைகளையும் செய்யலானாள்.

"என்ன செய்கிறாய்?" என்று கிருஷ்ணன் கேட்டான்; சொன்னாள்.

"தேங்காய் வாங்கிக்கொண்டு வரலாமா என்று பார்த்தேன். வேண்டாமே? காரடைதானே முக்கியம்?" என்று கேட்டான் கிருஷ்ணன்.

"வேண்டாமல் என்ன? வேணும்; வாங்கி வாருங்கள். வேலைக்காரிக்கு ஒரு மூடி தருகிறேன். குழந்தைகள் வந்தால் உடைத்துத் தருகிறேன். நமக்கு அலுத்தால் வேண்டாம்" என்று சொல்லிவிட்டாள் ஜனகம்.

எப்போதும் இறக்கம் எளிது; ஏற்றம் கடிது. ஆனால் மனவன்மையும், சாதனை நோக்கமும் ஏற்பட்டுவிட்டால் ஏற்றமும் எளிதுதான். அவளிடம் இருந்த சுயநலம் எத்தனை விரைவில் மறைந்து போய்விட்டது!

அவசர அவசரமாகச் செய்த காரடையையும், பாட்டியின் உழைப்பினாலான வெண்ணெயையும் வைத்து நிவேதனம் செய்தாள். பங்குனி பிறந்திருக்கும்; மணி ஏழரையாகிவிட்டது என்று அவசரப்பட்டாள். சரட்டைக் கட்டிக்கொண்டு கணவனிடம் வந்தாள்.

"நமஸ்காரம் பண்ணுகிறேன்" என்று கூச்சமும் சிரிப்புமாக வணங்கி எழுந்தாள். அப்போது அவனுடைய காரியாலய நினைவு வந்தது. பதறிப்போய்க் கேட்டாள்.

"போகவேண்டாம்; லீவு எடுத்திருக்கிறேன். சாயங்காலம் கடைகள் மூடியிருக்கும். சாப்பிட்டதும் கடைத்தெரு போய் வரலாம். திங்கட்கிழமை உன் பிறந்த நாளாயிற்றே; ஓர் இஸ்திரிப்பெட்டி வாங்கி வருவோம்" என்றான் கிருஷ்ணன்.

ஜனகம் நாணத்துடன் அப்பால் போனாள். 'புராணகாலத்துச் சாவித்திரி பிறந்ததையோ, இறந்ததையோ யாரும் பேசுவதில்லை; நினைப்பதில்லை. ஆனால் அவளுடைய மனத்திண்மையை நாடு முழுவதும் போற்றி வணங்குகிறது பல்லாண்டுகளாக. என்னைப் போன்ற சோம்பேறிப் பெண்ணின் பிறந்த நாளா முக்கியம்?' என்று ஜனகம் உடல் குன்றிப்போனாள்.

'ஏழையோ, அந்தஸ்தற்றவனோ? கணவன்; அவனே துணைவன்' என்று சாவித்திரி பக்திபூண்டாள். இப்போது கிருஷ்ணன், அவளிடமுள்ள குற்றங்குறைகளை உணராமல் மனைவி என்ற பாசமும் பரிவுமே மிகுந்திருந்தான். புத்துயிர் பெற்றவள் ஜனகந்தான்.

** ** **

இவற்றையெல்லாம் சிந்தித்து வியந்தாள் ஜனகம். தூக்கம் வராமல் புரண்டு புரண்டு விழித்திருந்தாள். கிருஷ்ணனுக்குத் தெரியுமா அவளுடைய கடந்த கால நினைவின் சிறுமையும், தெரிந்து கொண்ட புத்தறிவின் பெருமையும்?

"என்னையும் அநாவசியமாக எழுப்பிவிட்டாய். நீயும் தூக்கம் வராமல் திண்டாடு. காலையில் செய்கிறதுதானே நோன்பை?" என்று அன்புடன் அவன் மனைவியைக் கடிந்துகொண்டான்.

"போதுமே! செய்தால் மாசியில் செய்ய வேண்டும்; ராத்திரியில்தான்; காலையில் பலன் இல்லை. இப்போது யாருக்கு என்ன கஷ்டம்? ஒரு நாளைக்குத்தான் தூக்கம் கெடட்டுமே!" என்று பதிலிறுத்தாள் ஜனகம்.

"உம்! சத்தியவானை மீளா நித்திரையிலிருந்து எழுப்பினாள் சாவித்திரி. நீ என்னை மீளுகிற தூக்கத்திலிருந்து எழுப்ப நோன்பு செய்தாய்!" என்று கிருஷ்ணன் சிரித்தான்.

"போதுமே! அசட்டுப்பிசட்டென்று என்ன பேச்சு? எனக்குத் தூக்கம் வருகிறது; ஒரு மணிக்கே எழுந்தேனாக்கும்!" என்று சொல்லிக் கப்சிப்பென்று பேச்சடங்கிப் போனாள் ஜனகம்.

'தூங்குகிறவரை எழுப்புவது புண்ணியமா? நமஸ்காரம் செய்ய எழுப்ப வேணுமே?' என்று அவள் முன்பு யோசித்தபோது, 'எழுப்புவதே நல்லது' என்று அவள் முடிவு செய்தாளே, அப்போது என்ன நினைத்தாளோ அதையே கணவன் கூறிவிட்டானே!

தாலிச் சரட்டுடன் இணை சேர்ந்த நோன்புச் சரட்டை ஜனகத்தின் கைகள் துழாவின. அவள் உள்ளத்திலே ஒரு வகையான பெருமித உணர்ச்சி மிதந்தது.

**********

(கலைமகள், ஏப்ரல்,1953)